Holland Bloorview
Kids Rehabilitation Hospital

**Holland Bloorview**
**Kids Rehabilitation Hospital**
150 Kilgour Road
Toronto ON Canada M4G 1R8
**T** 416 425 6220
**T** 800 363 2440
**F** 416 425 6591
www.hollandbloorview.ca

A teaching hospital fully affiliated
with the University of Toronto

உங்கள் ஆரோக்கிய நிலையில் ஒரு மாற்றம் ஏற்பட்டு உள்ளது அல்லது இக்கடிதம் தவறுதலாக உங்களிடம் வந்து சேர்ந்துள்ளது என்றால், தயவுசெய்து ஹொலன்ட் புளோர்வியூ (Holland Bloorview) வைத்தியசாலையின் ஆரோக்கிய தரவுப் பதிவுகள் (Health Data Records) பிரிவுடன் (416) 425-6220 தொடரெண் 3422 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு, உங்களுடைய அல்லது உங்கள் பிள்ளையின் ஆரோக்கியம் தொடர்பிலான பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

யூன் மாதம் திகதி 1, 2018

அன்பார்ந்த சேவைபெறுநர் மற்றும் அவரது குடும்பத்தினர் அறியத் தருவது:

யூனிவேர்சிற்றி ஒ.ஃப் ரொறொன்ரோ (University of Toronto) பல்கலைக் கழகத்துடன் பூரண முறையில் இணைந்து செயற்படும் மருத்துவம் கற்பிக்கின்ற ஒரு வைத்தியசாலை என்ற விதத்தில், ஹொலன்ட் புளோர்வியூ கிட்ஸ் றிகபிலிற்றேஷன் வைத்தியசாலை (ஹொலன்ட் புளோர்வியூ) / Holland Bloorview Kids Rehabilitation Hospital (Holland Bloorview) இங்கு இடம்பெறும் முக்கிய ஆரோக்கியத் துறை ஆராய்ச்சி பற்றி அறிந்து கொள்வதற்கான அணுகு நிலையும் வாய்ப்பும் நாம் சேவை வழங்கும் பிள்ளைகள், இளைஞர், பெற்றோர் ஆகியோருக்கும் கிடைக்க வேண்டும் என்று நம்புகிறது. ஆராய்ச்சி என்பது, வலுக்குறைவுகள் பற்றி நாம் மேலும் அறிந்து கொள்வதற்கும், புதிய தொழில் நுட்பங்களையும் சிகிச்சை முறைகளையும் உருவாக்கி அவற்றின் திறனைக் கணிப்பதற்கும் உதவ முடிகிறது. எமது பிள்ளைகள், இளைஞர், பெற்றோர் யாவருக்கும் மிகவும் அர்த்தமுள்ள ஆரோக்கியமான எதிர்காலத்தை வழங்கும் எமது இலட்சிய நோக்கினை நாம் அடைவதற்கும் அது உதவ முடியும்.

எமது இலட்சிய நோக்குக்கு இசைவாக, நாங்கள் 2018 யூலை மாதம் 1ம் திகதி தொடக்கம் எமது ஆராய்ச்சியைப் பற்றி அறிவிக்கின்ற புதிய ஒரு திட்டத்தை மிகுந்த ஆர்வத்துடன் ஆரம்பிக்க உள்ளோம். இத்திட்டத்திற்கு, **connect2research** (கொனெக்ற்-ரு-றிசேர்ச்) என்று பெயரிடப்பட்டு உள்ளது. ஹொலன்ட் புளோர்வியூ வைத்தியசாலையில் நடைபெறும் புதிய ஆராய்ச்சி பற்றிய விழிப்புணர்வை இத்திட்டம் அதிகரிக்கின்ற அதே வேளையில், ஆராய்ச்சி பற்றி அறிய விரும்பும் அல்லது அதில் பங்குபற்ற விரும்பும் இன்னும் அதிகமான சேவைபெறுநர்களும் அவர்களின் குடும்பத்தினரும் சமஅளவில் தகவலினைப் பெறுவதற்கும் இத்திட்டம் உதவியாக இருக்கும் .

இந்த **connect2research** திட்டத்தில் அடங்கியுள்ள தரவுத்தளம், வைத்தியசாலையின் அங்கீகாரம் பெற்ற, காப்புநிலை கொண்ட ஒரு மென்பொருளை உபயோகித்து, அதன் மூலம் ஹொலன்ட் புளோர்வியூவில் பேணப்படும் சேவைபெறுநரின் மின்னியல் முறையிலான ஆரோக்கிய பதிவேட்டில் காணப்படும் பிறந்த திகதி, மருத்துவ நிலையின் உறுதிப்பாடு, தொடர்பு கொள்வதற்கான தகவல் ஆகிய மட்டுப்படுத்திய தகவலுடன் தொடர்பு கொண்டதாக உள்ளது. குறித்த ஓர் ஆராய்ச்சி ஆய்வுக்குப் பொருத்தமான (கடந்த கால அல்லது நிகழ்கால) சேவைபெறுநர்களை அடையாளம் கண்டு அவர்களை ஹொலன்ட் புளோர்வியூ ஆராய்ச்சியாளர்களுடன் நேரடியாக இணைப்பதற்கு இத்தொடர்பு உதவிகரமாக உள்ளது.

ஹொலன்ட் புளோர்வியூ (Holland Bloorview) வைத்தியசாலையின் தற்போதைய அல்லது கடந்த கால சேவைபெறுநர் என்ற விதத்தில்  உங்கள் பெயர் சுயமுறையில் **connect2research** தரவுத்தளத்தில் சேர்க்கப்படும். நீங்கள் இத்திட்டத்தில் இருந்து வெளியேறத் தீர்மானித்து எங்களை (416) 425-6220 தொடரெண் 3000 என்ற தொலைபேசி இலக்கத்தில் அழைத்து அல்லது connect2research@hollandbloorview.ca என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பி உங்கள் தீர்மானத்தை தெரிவித்தால் ஒழிய, இந்த ஏற்பாடு பின்பற்றப்படும். நீங்கள் **connect2research** திட்டத்தில் பங்கு வகிக்கிறீர்கள் என்றால் ஹொலன்ட் புளோர்வியூ ஆராய்ச்சியாளர் ஒருவர் உங்களைத் தொலைபேசியில் அழைத்து அல்லது தகவலினைக் கடிதம் மூலமாக அனுப்பி, நீங்கள் குறித்த ஆராய்ச்சி ஆய்வு அல்லது செயல்திட்டம் பற்றி மேலும் அறிய விரும்புகிறீர்களா என்று கேட்கலாம். நீங்கள் இச்சந்தர்ப்பத்தில் ஆய்வுக்கு ஆய்வு என்ற அடிப்படையில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப அதில் பங்குபற்றவோ அல்லது மறுக்கவோ முடியும். .  ஓர் ஆராய்ச்சி ஆய்வில் நீங்கள் பங்குபற்றுவது /பங்குபற்றாமல் விடுவது பற்றிய உங்கள் தீர்மானம் மற்றும் **connect2research** தரவுத் தளத்தில் உங்கள் பெயரும் அடங்கச் செய்வது /அடங்கச் செய்யாமல் விடுவது போன்ற காரணங்களால், நீங்கள் ஹொலன்ட் புளோர்வியூவில் பெறுகின்ற பராமரிப்பு அல்லது சேவைகள் பாதிக்கப்படுவது இல்லை.

உங்கள் தனிமறைவு நிலையை(privacy) பாதுகாப்பதிலும் உங்கள் தகவலினைக் காப்புநிலையில் வைத்திருப்பதிலும் ஹொலன்ட் புளோர்வியூ வைத்தியசாலை மிகத் தீவிரமான ஈடுபாடு காட்டி வருகிறது. தனிப்பட்ட ஆரோக்கியத் தகவல் பாதுகாவல் சட்டத்துக்கு (Personal Health Information Protection Act /PHIPA) அமைவாக ஆரோக்கிய பராமரிப்பு தொடர்பிலான தகவல்கள் யாவும் இங்கு மிகத் தீவிரமான முறையில் அந்தரங்கமாகவும், பாதுகாப்பாகவும் காவற்படுத்தப்பட்ட நிலையில் பேணப்பட்டு வருகின்றன. தனிமறைவு நிலை தொடர்பிலான எந்தவொரு கேள்விக்கும் தயவுசெய்து தனிமறைவு நிலைக் காரியாலயத்துடன் (Privacy Office) (416) 425-6220 தொடரெண் 3467 தொலைபேசி எண்ணில் அல்லது privacy@hollandbloorview.ca மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

இந்த **connect2research** திட்டம் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கு நீங்கள் விரும்பினால் தயவுசெய்து *research.hollandbloorview.ca/connect2research* என்ற இணையத்தளம் செல்லுங்கள் அல்லது (416) 425-6220 தொடரெண் 3000 தொலைபேசி எண்ணில் அல்லது connect2research@hollandbloorview.ca மின்னஞ்சல் முகவரியில்

எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். மேலும் உங்களிடம் இருந்து உங்களுக்குத் தோன்றும் எண்ணங்கள், கேள்விகள் அல்லது கருத்துக்கள் பற்றி அறியும் சந்தர்ப்பத்தையும் நாம் பெற விரும்புகிறோம்.

உங்கள் நேர்மையுள்ள,

President and CEO
Holland Bloorview Kids Rehabilitation Hospital

Vice President, Research
Director, Bloorview Research Institute
Holland Bloorview Kids Rehabilitation Hospital